# <u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S. No.189-2017 Date : 05-02-2025

பெயர் : அந்தோணிராஜ் (எ) இப்ராகிம் பிவாசா 1

1985 ம் ஆண்டு கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் எனது பெயர் சின்னப்பன் மகன் அந்தோணிராஜ் என குறிப்பிட்டு கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் மற்றும் அவரது முன்னோர்களின் பூர்வீக சொத்துக்கள் இருந்ததா என்றால் இருந்தது. பூர்வீக சொத்தில் சில சொத்துக்களை விற்பனை செய்துள்ளீரா என்றால் நான் ஏற்கனவே விற்பனை செய்து வெளியூருக்கு சென்றுவிட்டேன். ஆரோக்கியமேரிபூங்கொடி என்பவர் எனது மகள் என்றால் சரிதான். எனக்கும் எனது முதல் மனைவிக்கும் எத்தனை வாரிசுகள் என்றால் அவர்கள் ஜேம்ஸ், சார்லி, அப்துல்லா, மற்றும் ஆரோக்கியமேரிபூங்கொடி ஆவார். நான் கிறித்துவ மதத்திலிருந்து இஸ்லாமிய மதத்திற்கு மாற்றம் செய்தது தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. நான் ஜுனைதா என்பவரை சட்டப்படியாக திருமணம் செய்துள்ளீரா என்றால் சட்டப்படியாக திருமணம் செய்துள்ளேன். அதற்குண்டான ஆவணத்தை தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ-3 ஆவணம் ஜுனைதா பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்த பின்னிட்டு அச்சொத்தை ஜுனைதா அனுபவம் செய்து வந்தாரா என்றால் இல்லை தாவா சொத்தை நான் மற்றும் வாதிகளுடன் தற்போதுவரையில் கூட்டாக அனுபவம் செய்து வருகிறேன் என்றால் இல்லை. அச்சொத்தை எனது முதல் மனைவியின் வாரிசுகளுக்கு பாக அட்டவணை மூலம் பாகமாக கொடுத்துள்ளேன். 1ம் வாதியின் கணவரான தாமஸ் ஜார்ஜ் என்பவருக்கு சொத்துக்கள் ஏதேனும் எழுதி வைத்துள்ளீரா என்றால் எழுதி வைத்துள்ளேன். முதல் மனைவியின் வாரிசுகளிடமிருந்து பாக விடுதலை ஆவணம் எழுதி பெற்றதாக குறிப்பிட்டுள்ள விடுதலை ஆவணத்தை தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது மகள் ஆரோக்கியமேரி பூங்கொடி என்பவருக்கு பி.வா.சா.ஆ-4 ஆவணம் மூலம் கிரையமா கொடுதத சொத்தை அவர் அனுபவம் செய்து வருகிறாரா என்றால் அனுபவம் செய்து வருகிறார். அவருடன் எனக்கு எவ்வித பேச்சுவார்த்தையும் கிடையாது.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது )

ஒப்பம்/- (சி.ப.முல்லைவாணன், பி.ஏ.,பி.எல்., Hons)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கராபுரம்.